1970 செப்டம்பர் 9]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) 1968-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத்துறைப் பணிகளில் கட்டணங்களை மாற்றியமைக்கும்பொழுது நாகர்கோயிலில் இருந்து 10 மைல் சுற்றளவுக்கு அப்பால் கிலோமீட்டர் ஒன்றுக்கு 2 காசிலிருந்து 2.5 காசாக இத்துறையின் கன்னியாகுமரிப் பிரிவிலும் கட்டண வீதங்களை அரசு மாற்றியமைத்தது. நாகர்கோயிலின் 10 மைல் சுற்றளவுக்கும் சென்னை மாநகரக் கட்டண விதங்கள் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளன.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இரண்டு தடவை கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும், மூன்றாவது தடவை கட்டணத்தை உயர்த்துவதற்கு அரசாங்கத்தில் ஒரு குறிப்பு இருப்பதாகத் தெரிகிறது. அதைப் பொது மக்கள் வெறுக்கின்ற காரணத்தினால், இப்பொழுது இருக்கிற அந்த எண்ணத்தைக் கைவிட அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதைப்பற்றிய தகவல் இப்பொழுது தருவதற்கில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த ஃபேர் எல்லாம் கூட்டுவது சம்பந்தமாக பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. குறிப்பாக, மலைப் பகுதிகளிலே ஓடுகிற பஸ்களிலே ஒரு கட்டணம், கடலோரப் பகுதிகளிலே ஓடுகிற பஸ்களிலே இன்னொரு கட்டணம் என்று வித்தியாசம் இருக்கிறது. இதை ஒருமைப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கட்டண விகிதத்தை மாற்றுகின்ற ஆலோசனை இப்பொழுதில்லை. ஆனல், மாண்புமிகு உறுப்பினர் கருத்தைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஆட்சேபணை இல்லை.

திருமானூருக்கு அருகில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம்

* 330 **வினா—திரு. ஆர். கருப்பையா:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், திருமானூர் அருகே கொள்ளிடம் ஆற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டும் வேலை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்பணிக்கான ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு 20—10—1969 அன்று பணி தொடங்கியது. திருமானூர் பக்கத்தில் நீர்ப்பாய்ச்சல் இருந்ததால், விளாங்குடி பக்கத்திலிருந்து பணி துவக்கப்பட்டது. 22 பாலத் தூண்களுக்கான 22 கிணறுகளில், எல்லா பாலத் தூண்களுக்கான விளிம்புக் கட்டைகள் அமைக்கப்பட்டு, 115 அடி ஆழத்திற்கு காரை பூசப்பட்டுள்ளது. இப் பணி விரைந்து நிறைவேறி வருகின்றது.

திரு. ஆர். கருப்பையா: தலைவர் அவர்களே, இந்தத் திருமானூர், விளாங்குடிப் பக்கத்தில் அமைக்கக்கூடிய பாலமானது திருச்சி, தஞ்சை மாவட்டங்களை இணைக்கின்ற பாலமாக இருப்பதினால், போக்குவரத்திற்கு

வசதியாக இருக்கும். இதற்கு எஸ்டிமேட் தொகை எவ்வளவு? சில கால மாக வேலை கொஞ்சம் சுணக்கமாக நடைபெறுகிறதே, இதை விரைவுபடுத்த அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தப் பாலத்திற்கு எஸ்டிமேட் தொகை ரூ. 52 லட்சம். இதைத் தரைமட்ட பாலமாக அமைக்கலாமா, அல்லது உயர்மட்ட பாலமாக அமைக்கலாமா என்று பரிசிலிக்கப்பட்டு, உயர்மட்ட பாலம் அமைக்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. இரண்டு ஆண்டு காலத்திற்குள் முடிக்குமாறு உத்தர விடப்பட்டிருக்கிறது. இப்பொழுது வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. துரிதமாக முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆர். கருப்பையா : இந்தப் பால வேலை நடந்துகொண்டிருக்கும் பொழுது கிணறு தோண்டுகிற சமயத்தில் இரண்டு ஐம்பொன் சிலைகள் அங்கிருந்தது கண்டுபிடிக்கப்பட்டன. அந்தச் சிலைகளை இப்பொழுது எங்கே வைத்திருக்கிறுர்கள்? இது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப்பற்றித் தகவல் என்னிடம் இல்லை. பொன் கிடைத்தால் வைத்துக் கொள்ளலாம்.

தண்டராம்பட்டு அருகில் ஆலையாற்றின் குறுக்கேயுள்ள பாலம்

*331 வினு.—திரு. கே. சகாதேவக் கவுண்டர் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணுமலை--தாணிப்பாடி போகும் நெடுஞ்சாலையில் தண்டராம் பட்டு கிராமத்திற்கு அருகில் ஆலையாற்றின் மேல் கட்டப்பட்டுள்ள பாலத்தை புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருவண்ணுமலை-தாணிப்பாடி சாலையில் 34/5-வது மைலில் உள்ள பாலத்தைத் தற்போது புதுப்பிப்பதற் கான செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. கே. சகாதேவக் கண்டர் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சுமார் நான்கு ஆண்டுக் காலமாக இந்தப் பாலம் பழுதடைந்துவிட்டது என்று போர்டு எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. வாகனுதிகளை நிறுத்தவேண்டும் என்று போர்டு எழுதி ஒட்டிவைக்கப்பட்டிருக்கிறது. நான்கு ஆண்டுக் கால மாக இன்றுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பாலம் நாளுக்கு நாள் அதிகமாக மோசமாகப் போய்க்கொண்டிருக்கிற காரணத் திஞல், பொது மக்களுக்கு எந்தவிதமான ஆபத்தோ, விபத்தோ ஏற்படாத வகையில், இனிமேலாவது அந்தப் பாலத்தை புதுப்பிப்பதற்கு இந்த அரசு பரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிற குறிப்பின்படி பாலம் நல்ல முறையில் இருப்பதாகத் தெரி விக்கப்பட்டிருக்கிறது. பாலத்தைப் புதுப்பிப்பதற்குச் செயற்குறிப்பு இல்லை. இருப்பினும் அங்கத்தினர் கருத்தை மறுபடியும் தலைமைப் பொறியாளருக்கு அனுப்பி, அறிக்கை கேட்டு, நடவடிக்கை எடுக்கலாம்.